# கோவை தொழில்நுட்பக் கல்லூரி

## முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

## 2020-2021

## அகவை -64

- முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவையின் 2020-2021 ஆம் ஆண்டின் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய தெளிவான தகவல்கள் இந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வாழிய வாழியவே...**

**தமிழ் வாழிய வாழியவே...**

# முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

## (அகவை – 64)

## முத்தமிழ் மன்றக் குழுமம்

### முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை ஆசிரிய ஆலோசகர்கள்

- முனைவர் .தி. ராம்ராஜ் : கணிப்பொறியியல் துறை
- திரு. மு. கார்த்திகேயன் : இயந்திரவியல் துறை
- முனைவர் . ரா. ராஜலட்சுமி : மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை

### முத்தமிழ் மன்ற முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள்

- மா.ஸ்ரீனிவாசன் – முத்தமிழ் மன்றச் செயலர்
- செ.செல்வப்பிரியா – முத்தமிழ் மன்றச் செயலர்
- அ.ராபின் இன்ஃபன்ட் – முத்தமிழ் மன்றத் துணைச் செயலர்
- த.பவதாரிணி – முத்தமிழ் மன்றத் துணைச் செயலர்
- நா.நந்தீஷ் – முத்தமிழ் மன்றப் பொருளாளர்

### இளம்பறவை முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள்

- வ.சே.கரண் – இளம்பறவை ஆசிரியர்
- உ.தீபிகா – இளம்பறவை இணை ஆசிரியர்
- வா . ச. காவியா – இளம்பறவை துணை ஆசிரியர்

## கூடுதல் ஒருங்கிணைப்பாளர்கள்

- சி.செ.பவித்ரா தேவி – நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
- க.கனகவல்லி – நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
- மு.கௌசல்யா – நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
- ப.ஜெய்சீலன் – வெளிக்கல்லூரிப் போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்
- ந.சிந்துஜா – வெளிக்கல்லூரிப் போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்
- கோ.ஞானஸ்ரீ – செய்தித் தொடர்பாளர்
- ச.சரண்யாதேவி – செய்தித் தொடர்பாளர்
- மா.பிரேம் சுந்தர் – வலைப்பதிவு மற்றும் சமூக வலைதளப் பொறுப்பாளர்
- வி.செ.சுகுணா – வலைப்பதிவு மற்றும் சமூக வலைதளப் பொறுப்பாளர்
- வே.சுஜித் குமார் – வலைப்பதிவு மற்றும் சமூக வலைதளப் பொறுப்பாளர்

- பி.பிரகாஷ் – கலைகள் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்
- ம.கிருஷ்ணமூர்த்தி – கலைகள் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்
- மா.பிரீத்தி – கலைகள் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்
- ல.பி .சாகித்யா – கலைகள் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்

- மு.பிரவீன் – புத்தக வாசிப்பு மற்றும் புதுமைப்படைப்பு உருவாக்கப் பொறுப்பாளர்
- மு.தவ்ஃபிக் ஹிதாயா – புத்தக வாசிப்பு மற்றும் புதுமைப்படைப்பு உருவாக்கப் பொறுப்பாளர்
- ஆ.மௌனிதா – புத்தக வாசிப்பு மற்றும் புதுமைப்படைப்பு உருவாக்கப் பொறுப்பாளர்
- கோ.காவிய மஞ்சு – புத்தக வாசிப்பு மற்றும் புதுமைப்படைப்பு உருவாக்கப் பொறுப்பாளர்

- அ.ராபின் இன்ஃபன்ட் – சுவரொட்டி மற்றும் காணொலி உருவாக்கப் பொறுப்பாளர்
- ஜெ.நந்தனா – சுவரொட்டி மற்றும் காணொலி உருவாக்கப் பொறுப்பாளர்.

| | |
|---|---|
| மன்றம் | முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை |
| ஆசிரிய ஆலோசகர்கள் | முனைவர். தி. ராம்ராஜ்<br>உதவிப் பேராசிரியர்<br>கணிப்பொறியியல் துறை |
| | திரு. மு. கார்த்திகேயன்<br>உதவிப் பேராசிரியர்<br>இயந்திரவியல் துறை |
| | முனைவர். ரா. ராஜலட்சுமி<br>உதவிப் பேராசிரியர்<br>மின்னியல் மற்றும் மின்னணுவியல் |
| அறிமுகம் | கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், 1957ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சுமார் 63 ஆண்டுகளாக செந்தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்த்து வருகிறது. |
| முறைத்திட்டம் (MISSION) | மாணாக்கரிடம் இருக்கும் தமிழ் ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களிடம் ஒளிந்திருக்கும் பல்வேறு தனித்திறமைகளை வெளிக்கொணர்வதற்குத் தேவையான உதவிகளை முத்தமிழ் மன்றம் ஆண்டுதோறும் செய்து வருகிறது. |
| நோக்கம் (VISION) | மாணவர்களின் தமிழ்ப் பற்றினையும்,மொழி வன்மையையும் தூண்டி, அவர்தம் மொழியாலும் உணர்வாலும் செந்தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்ப்பதே நம் முத்தமிழ் மன்றத்தின் தலையாய நோக்கமாகும். |
| நடத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை | 35 |

| நிகழ்வின் பெயர் | தேதி | பொறுப்பாளர்கள் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | நிகழ்நிலை/ அகல்நிலை செயல்வகை |
|---|---|---|---|---|
| உள்ளிருந்தே கலைகள் செய் | 05/05/2020 | நா.நந்தீஷ் | 30 | நிகழ்நிலை |
| முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் | 18/05/2020 | கா.மா.நிகரன்<br>வே.சுஜித் குமார் | 20 | நிகழ்நிலை |
| அகவை-64 | 31/05/2020 | கு.நவீன் குமார் | 180 | நிகழ்நிலை |
| முத்தமிழ் மன்ற வலைதள வெளியீடு | 15/06/2020 | வே.சுஜித் குமார் | 400 | நிகழ்நிலை |
| சேலம் அரசினர் பொறியியற் கல்லூரி கவிதைப் போட்டி | 21/06/2020 | ப.ஜெய்சீலன்<br>ந.சிந்துஜா | 5 | நிகழ்நிலை |
| கதை சொல்லப்போறோம் | 30/06/2020 | ஜெ.நந்தனா<br>மு.வசந்த மாலிகா | 60 | நிகழ்நிலை |
| கவிபாடல்-பகுதி 1 (கவிதைத்தமிழ்) | 28/07/2020 | மா.ஸ்ரீனிவாசன் | 295 | நிகழ்நிலை |
| கவிபாடல்-பகுதி 2 (ஒளியும் ஒலியும்) | 29/07/2020 | கு.நவீன் குமார் | 280 | நிகழ்நிலை |
| முத்தமிழ் மன்றத்தின் புதிய இலட்சினை வெளியீடு | 23/08/2020 | அ.ராபின் இன்ஃபன்ட் | 400 | நிகழ்நிலை |
| முத்தமிழ் மன்ற உறுப்பினர் சேர்க்கை | 26/08/2020 | த.பவதாரிணி<br>அ.ராபின் இன்ஃபன்ட் | 80 | நிகழ்நிலை |
| தமிழிசை 1 (வெய்யோன் சில்லி) | 30/08/2020 | கு.நவீன் குமார்<br>சா.ராகுல் | 550 | நிகழ்நிலை |
| கவிச்சில்லு | 13/09/2020 | ச.இஷாஸ்ரீ | 250 | நிகழ்நிலை |
| நாலேஜ் தொழில்நுட்பக் கல்லூரியின் (KIOT) காற்றுவிடு தூது 5.0 | 18/09/2020 | ப.ஜெய்சீலன்<br>ந.சிந்துஜா | 3 | நிகழ்நிலை |
| தமிழிசை 2 (எள்ளு வய பூக்கலயே) | 20/09/2020 | மா.ஸ்ரீனிவாசன்<br>ச.அஸ்வினி | 1300 | நிகழ்நிலை |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு நாள் ஒரு சொல் | 05/10/2020 | மா.பிரேம் சுந்தர்<br>ஜெ.நந்தனா | 200 | நிகழ்நிலை |
| முத்தமிழ் மன்ற ஆசிரிய ஆலோசகர்களுடன் கலந்தாய்வு | 09/10/2020 | மா.ஸ்ரீனிவாசன் | 10 | நிகழ்நிலை |
| முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு | 10/10/2020 | செ.செல்வப்பிரியா | 30 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி காணொலி வெளியீடு | 18/10/2020 | அ.ராபின் இன்ஃபன்ட் | 210 | நிகழ்நிலை |
| கதைப்போமா | 21/10/2020 | நா.நந்தீஷ் | 50 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (இனிதே துவக்கம்) | 21/10/2020 | மா.ஸ்ரீனிவாசன் | 770 | நிகழ்நிலை |
| புத்தகம் 360° | 23/10/2020 | ஆ.மௌனிதா | 40 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (அன்றே கணித்தார்) | 28/10/2020 | சஷ்டிகா | 180 | நிகழ்நிலை |
| புத்தகம் 360° | 30/10/2020 | ஆ.மௌனிதா | 30 | நிகழ்நிலை |
| மாணவர் மன்ற துவக்க விழா | 04/11/2020 | மா.ஸ்ரீனிவாசன் | 100 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (புகுந்த வீடு) | 05/11/2020 | ப.ஜெய்சீலன் | 234 | நிகழ்நிலை |
| இளம்பறவை 2020 இதழ் வெளியீடு | 06/11/2020 | கி.செ.கணநாதன் | 169 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (ஒன்றிலிருந்து ஆறு வரை) | 12/11/2020 | மு.கௌசல்யா | 190 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (இந்த நாள் இனிய நாள்) | 14/11/2020 | வ.சே.கரண் | 138 | நிகழ்நிலை |
| இளம்பறவை இதழுக்கான படைப்புகள் சேகரிப்பு | 29/11/2020 | வ.சே.கரண்<br>உ.தீபிகா | 20 | நிகழ்நிலை&<br>அகல்நிலை |

| | | | | |
|---|---|---|---|---|
| முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு | 05/01/2021 | மா.ஸ்ரீனிவாசன் செ.செல்வப்பிரியா | 30 | அகல்நிலை |
| சொல்லாடல் | 12/01/2021 | சி.செ.பவித்ரா தேவி ம.கிருஷ்ணமூர்த்தி | 10 | நிகழ்நிலை |
| காற்றின் மொழி (தைப்பொங்கல்) | 14/01/2021 | ஆ.மௌனிதா | 223 | நிகழ்நிலை |
| கலையரங்கம் (பறை இசை) | 19/01/2021 | வே.சுஜித் குமார் | 140 | நிகழ்நிலை |
| பச்சைக் கிளிகள் தோளோடு | 23/01/2021 | அ.அருள் பிரசாத் ப.காந்திமதி | 35 | நிகழ்நிலை |
| சொந்தக் கதை சோகக் கதை | 28/02/2021 | மா.ஸ்ரீனிவாசன் த.பவதாரிணி | 20 | நிகழ்நிலை |
| அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியின் நிரல்களம்'21 (HACKATHON) | 06/03/2021 | த.பவதாரிணி, மு.அஜய் , தி.லோகநாதன், தி.ரூபேஷ், பா.சேதுபாரதி | 4பேர் (1 குழு) | நிகழ்நிலை |
| உரியர் பிறர்க்கு | 20/03/2021 | நா.நந்தீஷ் | 5 காப்பகங்கள் | அகல்நிலை |

# 1 உள்ளிருந்தே கலைகள் செய்

| | |
|---|---|
| தேதி | : 05/05/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு |
| காலம் | : 3 நாட்கள்(03/05/2020-05/05/2020) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 30 |
| பொறுப்பாளர்கள் | : நா.நந்தீஷ் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- கல்லூரி மாணவர்களிடையே இணைய வழிப்போட்டிகள் "**உள்ளிருந்தே கலைகள் செய்**" என்னும் பெயரில் நடத்தப்பட்டன.
- அகவை 64இன் முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள் அடுத்த ஆண்டு மன்றத்தினை வழிநடத்த முன் அனுபவமாக போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினர்.
- மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய மற்றும் கலை சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டன.
- இந்த இணைய வழிப்போட்டிகள் இயல், இசை, நாடகம் என முத்தமிழ்ப் பிரிவுகளிலும் நடத்தப்பட்டது.




➢ அவற்றுள் கவிதை, ஹைக்கூ, புதுமொழி முதலிய பல்வேறு போட்டிகள் மாணவர்களுக்குள் இருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொணர்வதற்காக நிகழ்த்தப்பட்டன.

# 2 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

| | |
|---|---|
| தேதி | : 18/05/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு, முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 20 |
| பொறுப்பாளர்கள் | : கா.மா.நிகரன்,<br>வே.சுஜித் குமார் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- நமது கல்லூரியின் முத்தமிழ் மன்ற உறுப்பினர்கள் சார்பாக 18.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் மறைந்த தமிழ் நெஞ்சங்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.
- மாணவர்கள் அனைவரும் மறைந்த சகோதர சகோதரிகளுக்கு அவர்களின் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தனர்







# 3 அகவை–64 ஒருங்கிணைப்பாளர்கள் அறிவிப்பு

| | |
|---|---|
| தேதி | : 31/05/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு, முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 180 |
| பொறுப்பாளர்கள் | : கு.நவீன் குமார் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் 64ஆம் அகவைக்கான (2020-2021) முத்தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர்களை அறிவிக்க முடிவு எடுக்கப்பட்டது.
- மறைந்த கவிஞர் நீலவாணன் அவர்களின் பிறந்தநாளன்று (31.05.2021) ஒருங்கிணைப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.
- முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவையின் 64 ஆம் அகவைக்கான முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இதரப்பொறுப்பாளர்களைச் சேர்த்து 27 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.– வெவ்வேறு பொறுப்புகளில் நியமிக்கப்பட்டனர்.


முத்தமிழ் மன்றம்
முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள்
செயலர்கள்
மா. ஸ்ரீனிவாசன் இயந்திரவியல்
செ. செல்வப்பிரியா மின்னியல் மற்றும் மின்னணுவியல்
துணைச் செயலர்கள்
அ. ராபின் இன்ஃபன்ட் இயந்திரவியல்
த. பவதாரிணி தகவல் தொழில்நுட்பவியல்
பொருளாளர்
நா. நந்தீஷ் இயந்திரவியல்
இளம்பறவை
முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள்
ஆசிரியர்
வ. சே. கரண் இயந்திரவியல்
இணை ஆசிரியர்
உ. தீபிகா மின்னியல் மற்றும் மின்னணுவியல்
துணை ஆசிரியர்
வா. ச. காவியா கட்டிடவியல்

| | |
|---|---|
| நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் | • சி. செ. பவித்ரா தேவி (மின்னியல் & மின்னணுவியல்)<br>• க. கனகவல்லி (மின்னணுவியல் & தகவல் தொடர்பியல்)<br>• மு. கௌசல்யா (மின்னணுவியல் & தகவல் தொடர்பியல்) |
| வெளிக்கல்லூரிப் போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்கள் | • ப. ஜெய்சீலன் (வேதிப்பொறியியல்)<br>• ந. சிந்துஜா (தகவல் தொழில்நுட்பவியல்) |
| செய்தித் தொடர்பாளர்கள் | • கோ. ஞானஸ்ரீ (மின்னியல் & மின்னணுவியல்)<br>• ச. சரண்யாதேவி (மின்னியல் & மின்னணுவியல்) |
| வலைப்பதிவு மற்றும் சமூக வலைத்தளப் பொறுப்பாளர்கள் | • மா. பிரேம் சுந்தர் (இயந்திரவியல்)<br>• வி. செ. சுகுணா (மின்னியல் & மின்னணுவியல்)<br>• வே. சுஜித் குமார் (இயந்திரவியல்) |
| கலைகள் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர்கள் | • பி. பிரகாஷ் (இயந்திரவியல்)<br>• மு. தவ்ஃபிக் ஹிதாயா (இயந்திரவியல்)<br>• மா. பிரீத்தி (கட்டிடவியல்)<br>• ல. பி. சாகித்யா (தகவல் தொழில்நுட்பவியல்) |
| புத்தக வாசிப்பு மற்றும் புதுமைப்படைப்பு உருவாக்கப் பொறுப்பாளர்கள் | • மு. பிரவீன் (மின்னியல் & மின்னணுவியல்)<br>• ம. கிருஷ்ணமூர்த்தி (மின்னியல் & மின்னணுவியல்)<br>• ஆ. மௌனிதா (கட்டிடவியல்)<br>• கோ. காவிய மஞ்சு (மின்னணுவியல் & தகவல் தொடர்பியல்) |
| சுவரொட்டி மற்றும் காணொலி உருவாக்கப் பொறுப்பாளர்கள் | • அ. ராபின் இன்ஃபன்ட் (இயந்திரவியல்)<br>• ஜெ. நந்தனா (முதுகலை அறிவியல் - மென்பொருள்) |

# 4 முத்தமிழ் மன்ற வலைத்தள வெளியீடு

| | |
|---|---|
| தேதி | : 15/06/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு, முத்தமிழ் மன்ற வலையொளி, முத்தமிழ் மன்ற வலைத்தளம் |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 400 |
| பொறுப்பாளர்கள் | : வே.சுஜித் குமார் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் அதிகாரப்பூர்வ வலைதளம் ஜுன் 15 (15.06.2020) அன்று வெளியிடப்பட்டது.
- இவ்வலைதளத்தின் முகவரி www.citmuthamilmandram.com.
- இவ்வலைதளத்தில் முத்தமிழ் மன்றத்தின் நிகழ்வுகள், செயல்பாடுகள்,மாணாக்கரின் படைப்புகள், இளம்பறவை இதழ்கள், ஆண்டறிக்கைகள் முதலியன இடம்பெற்றுள்ளன.
- மேலும் மன்றத்தில் தினந்தோறும் நடக்கும் நிகழ்வுகள் யாவும் வலைதளத்தில் பதிவேற்றப்பட்டு வருகின்றன.







- முத்தமிழ் மன்றத்தின் வலையொளி, படவரி பற்றிய தகவல்கள், புலனக் குழுவில் பகிரப்படும் சுவரொட்டிகள் பற்றிய விவரங்கள் என அனைத்தும் இங்கு காணப்படும்.
- நடத்தப்படும் நிகழ்வுகளில் எடுக்கப்படும் புகைப்படங்கள் யாவும் நினைவு அலைகளாக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

## 5 சேலம் அரசினர் பொறியியற் கல்லூரி கவிதைப் போட்டி

| | |
|---|---|
| தேதி | : 21/06/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு,முத்தமிழ் மன்றப் படவரி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 5 |
| பொறுப்பாளர்கள் | : ப.ஜெய்சீலன்,<br>ந.சிந்துஜா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- சேலம் அரசினர் பொறியியல் கல்லூரி சார்பாகக் கவிதைப் போட்டி ஜூன் 21 (21.06.2020) அன்று நடத்தப்பட்டது.
- அதில் நமது கல்லூரியைச் சார்ந்த சரண்.கு (தகவல் தொழில்நுட்பவியல் – இரண்டாம்ஆண்டு) மாணவர் பங்குபெற்று முதல் பரிசு பெற்றார்.



# 6 கதை சொல்லப் போறோம்

| | |
|---|---|
| தேதி | : 30/06/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு,கோ டு வெபினார் (GO TO WEBINAR) |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 60 |
| பொறுப்பாளர்கள் | : ஜெ.நந்தனா, மு.வசந்த மாலிகா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- நமது கல்லூரியின் முத்தமிழ் மன்றம் சார்பாக ஜுன் 30 (30.06.2020) அன்று மத்திய அரசின் ‘‘ஒரு இந்தியா நல்ல இந்தியா’’ ( Ek Bharat Shreshtha Bharat) வலைத்தள சொற்பொழிவு நடத்தப்பட்டது.
- அச்சொற்பொழிவு ‘‘கதை சொல்லப் போறோம்’’என்ற தலைப்பின் கீழ் கோ டு வெபினார் (GO TO WEBINAR) என்னும் நிகழ்நிலைத் தளத்தில் நடத்தப்பட்டது.
- முதல் , இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் ஐம்பெருங்காப்பியங்கள் ( சிலப்பதிகாரம் , சீவகசிந்தாமணி , மணிமேகலை,வளையாபதி , குண்டலகேசி) அனைத்தின் கதைகளையும் எல்லோரையும் கவரும் வண்ணம் எடுத்தியம்பினர்.




- மேலும் இந்நிகழ்வினைக் குறித்த அறிக்கை ஒன்று மத்திய அரசின் “ ஒரு இந்தியா நல்ல இந்தியா ” ( Ek Bharat Shreshtha Bharat ) வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- மாணவர்களுக்குள் இருக்கும் திறமைகளை வெளிக்கொணர இதுபோன்ற நிகழ்வுகள் பெரிதும் உதவிபுரிகின்றன.

# 7 கவிபாடல்–பகுதி 1 ( கவிதைத்தமிழ்)

| | |
|---|---|
| தேதி | : 28/07/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 295 |
| பொறுப்பாளர்கள் | : ம.ஸ்ரீனிவாசன் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் சார்பில் ‘‘கவிபாடல்’’என்னும் வலைதள நிகழ்வின் முதல் பகுதியானது ஜூலை 28 (28.07.2020) அன்று நடைபெற்றது.
- இம்முதல் பகுதி ‘‘கவிதைத்தமிழ்’’என்னும் பெயரில் இயந்திரவியல் மூன்றாம் ஆண்டு மாணவர் மா.ஸ்ரீனிவாசன் அவர்களால் விரிவுரை செய்யப்பட்டது.
- அதில் இன்றைய தலைமுறையினரிடம் நம் கவிதைத்தமிழின் பகுப்புகள் , குறிப்பிடத்தக்கத் தமிழ்க் கவிஞர்கள், புதுக்கவிதையின் தாக்கம், க்ஷ் முதலி யன குறித்து விவரிக்கப்பட்டன.
- மேலும் தமிழில் அண்டை நாட்டுக் கவிதையின் தாக்கம் போன்றவை விவாதிக்கப்பட்டன.

- இறுதியாக மாணவர்களுக்குக் கவிதைத்தமிழ் சார்ந்த செயல் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



# 8 கவிபாடல் – பகுதி 2 ( ஒலியும் ஒளியும்)

| | |
|---|---|
| தேதி | : 29/07/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 280 |
| பொறுப்பாளர்கள் | : கு.நவீன் குமார் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் சார்பில் “கவிபாடல்”என்னும் வலைத்தள நிகழ்வின் இரண்டாம் பகுதியானது ஜூலை 29 (29.07.2020) அன்று நடைபெற்றது.
- இரண்டாம் பகுதி “ஒளியும் ஒலியும் ”என்னும் பெயரில் இயந்திரவியல் நான்காம் ஆண்டு மாணவர் கு.நவீன் குமார் அவர்களால் விரிவுரை செய்யப்பட்டது.
- இந்நிகழ்வில் இன்றைய இளம் தலைமுறையினரிடம் தமிழ்த் திரையிசையின் வரையறைகள், அவற்றின் வகைகள் ,ஆங்கில வரையறையின் தாக்கம் ஆகியன குறித்து விவாதிக்கப்பட்டது.
- மேலும் மாணவ மாணவிகளுக்கு இப்பகுதியைச் சார்ந்த செயல் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- இரண்டு பகுதிகளாக நிகழ்த்தப்பட்ட "கவிபாடல்" நிகழ்வின் வாயிலாக மாணவர்கள் மத்தியில் கவிதைத்தமிழ் குறித்துப் பல்வேறு தகவல்கள் கொண்டு சேர்க்கப்பட்டன.






# 9 முத்தமிழ் மன்றத்தின் புதிய இலட்சினை வெளியீடு

| | |
|---|---|
| தேதி | : 23/08/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 400 |
| பொறுப்பாளர்கள் | : அ.ராபின் இன்ஃபண்ட் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் புதிய இலட்சினை ஆகஸ்ட் 23(23.08.2020) அன்று வெளியிடப்பட்டது.
- தொல்காப்பியர் அருளிய முத்தமிழினிலே தேவைக்கேற்ப மாறுதல்கள் நேரின் ,அறமிக்க அன்னை அவளது தமிழ்ப்பால் பருகிய அகவை 64 குழவிக்கும் தக்க மாறுதல்கள் இயல்புடையதே என்பதற்கேற்ப முத்தமிழ் மன்றத்தின் புதிய இலட்சினை சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இப்புதிய இலட்சினை இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் , ஆய்வாளர் மற்றும் எழுத்தாளரான இரா. வை. கனகரத்தினம் அவர்களின் பிறந்த நாளன்று வெளியிடப்பட்டது.






- முத்தமிழ் மன்ற வலையொளியிலும், புலனக் குழுவிலும் அகவை 64இன் புதிய இலட்சினை வெளியிடப்பட்டது

# 10 முத்தமிழ் மன்ற உறுப்பினர் சேர்க்கை

| | |
|---|---|
| தேதி | : 26/08/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 3 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 80 |
| பொறுப்பாளர்கள் | : அ.ராபின் இன்ஃபன்ட்<br>த.பவதாரிணி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் 2020-2021 ஆண்டிற்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான உறுப்பினர் சேர்க்கை ஆகஸ்ட் மாதம் 26 (26.08.2020) அன்று நடத்தப்பட்டது.









- வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த தமிழ் ஆர்வமிக்க இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் முத்தமிழ் மன்றக் குழுமத்துள் ஒருவராகினர் .
- அவர்களின் திறமைகளை வெளிக்கொணர முத்தமிழ் மன்றம் ஒரு சிறந்த மேடையாக அமையும் என்பதில் ஐயமேதுமில்லை.
- மேலும் முத்தமிழ் மன்றத்தில் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் நிகழ்வுகள் அனைத்தும் தனியொரு காணொலியாக முத்தமிழ் மன்றத்தின் வலையொளியில் வெளியிடப்பட்டது.

## 11 தமிழிசை 1 (வெய்யோன் சில்லி)

| | |
|---|---|
| தேதி | : 30/08/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 550 |
| பொறுப்பாளர்கள் | : கு.நவீன் குமார்,<br>சா.ராகுல் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் சார்பில் ‘‘தமிழிசை 1 (வெய்யோன் சில்லி)’’ என்னும் வலைத்தள நிகழ்வின் முதல் பகுதி ஆகஸ்ட் 30 (30.08.2020) அன்று நிகழ்த்தப்பட்டது.
- இந்நிகழ்வு திரைப்படப் பாடல்களின் மெட்டைத் தழுவி தமிழ்ச் செய்யுள் வரிகளை மாற்றியமைத்துப் பாடுமாறு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்நிகழ்வு இன்றைய இளைய தலைமுறையிடம், முக்கியமாகப் பள்ளி மாணவர்களிடம் செய்யுள் வரிகளை எளிய வகையில் கொண்டு சேர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

- மேலும் மாணவ மாணவியரின் செய்யுள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.
- இதில் ''சூரரைப் போற்று''படத்தின் வெய்யோன் சில்லி பாடலின் மெட்டைத் தழுவி சிலப்பதிகாரத்தில் ''மனையறம் படுத்த'' காதையில் கோவலன் கண்ணகியை நோக்கிப் பாடுமாறு வரிகள் அமைக்கப்பட்டுள்ளது.



# 12 கவிச்சில்லு

| | |
|---|---|
| தேதி | : 13/09/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலைத்தளம் |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 250 |
| பொறுப்பாளர்கள் | : ச.இஷாஸ்ரீ |
| சிறப்பு விருந்தினர் | : - |

- கவிதைத் தொகுப்பிற்கான வேலைகள் அனைத்தும் முடிவடைந்திருந்த நிலையில் *கவிச்சில்லு அகவை 1* (2019-2020) ஜூலை (13.09.2020) அன்று முத்தமிழ் மன்ற வலைத்தளத்தில் மின்னூலாக வெளியிடப்பட்டது.
- இளம்பறவை சார்பாக வெளியிடப்பட்ட இக்கவிதைத் தொகுப்பில் நம் கல்லூரி மாணவ மாணவியரின் தனித்திறன்கள் அழகிய கவிகளாகக் காணப்படுகின்றன.





# 13 நாலேஜ் தொழில்நுட்பக் கல்லூரியின் (KIOT) காற்றுவிடு தூது 5.0

| | |
|---|---|
| தேதி | : 18/09/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்றப் படவரி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 3 |
| பொறுப்பாளர்கள் | : ப.ஜெய்சீலன்<br>ந.சிந்துஜா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- நாலேஜ் தொழில்நுட்பக் கல்லூரியின் (KIOT) சார்பாகக் காணொலியில் கவிபாடும் தென்றல் காற்றுவிடு தூது 5.0 என்ற பெயரில் ஜூலை 18 (18.09.2020) அன்று நடைபெற்றது.
- அக்கவிதைப் போட்டியில் நம் கல்லூரியைச் சார்ந்த மூன்று மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- அதில் இரண்டாம் ஆண்டு தகவல் தொழில்நுட்பவியல் பயிலும் *சரண்.கு* என்னும் மாணவர் இரண்டாம் பரிசு பெற்றார்.



## 14 தமிழிசை 2 ( எள்ளு வய பூக்கலயே)

| | |
|---|---|
| தேதி | : 20/09/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 1300 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன்<br>ச.அஸ்வினி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் சார்பில் “தமிழிசை 2 (எள்ளு வய பூக்கலயே)” என்னும் வலைத்தள நிகழ்வின் இரண்டாம் பகுதி செப்டம்பர் 20 (20.09.2020) அன்று நிகழ்த்தப்பட்டது.
- இந்நிகழ்வு திரைப்படப் பாடல்களின் மெட்டைத் தழுவி, தமிழ்ச் செய்யு ள்வரிகளை மாற்றியமைத்துப் பாடுமாறு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்நிகழ்வு இன்றைய இளைய தலைமுறையிடம் முக்கியமாகப் பள்ளி மாணவர்களிடம் செய்யுள் வரிகளை எளிய வகையில் கொண்டு சேர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.
- மேலும் மாணவ மாணவியரின் செய்யுள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.

- இதில் ‘‘அசுரன்’’படத்தின் ‘‘*எள்ளு வய பூக்கலயே*’’ பாடலின் மெட்டைத் தழுவிச் சிலப்பதிகாரத்தில் ‘‘ஊர்சூழ் வரி’’ காதையின் சூழலைக் கொண்டு பாடுமாறு வரிகள் அமைக்கப்பட்டுள்ளது.



# 15 ஒரு நாள் ஒரு சொல்

| | |
|---|---|
| தேதி | : 05/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்றப் படவரி |
| காலம் | : தினந்தோறும் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 200 |
| பொறுப்பாளர்கள் | : மா.பிரேம் சுந்தர்<br>ஜெ.நந்தனா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்றத்தின் சார்பில் மன்ற உறுப்பினர்களின் தமிழ் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் அக்டோபர் 5 (05.10.2020) முதல் ‘‘ஒரு நாள் ஒரு சொல்’’தினந்தோறும் முத்தமிழ் மன்றப் புலனக் குழுவில் பகிரப்பட்டு வருகிறது.
- சங்ககாலத் தமிழ்ச் சொற்களுக்கு நிகரான தற்காலத் தமிழ்ச் சொற்களை அனைவரும் அறியும் வகையில் இந்நிகழ்வு இருந்து வருகிறது.
- இந்நிகழ்வில் தினந்தோறும் ஒரு சொல் முத்தமிழ் மன்றப் புலனக்குழுவிலும், முத்தமிழ் மன்றப் படவரிப் பக்கத்திலும் பகிரப்பட்டு வருகிறது.
- இதன் மூலம் மாணவ மாணவிகள் புதிதாக பல்வேறு தமிழ்ச் சொற்களை அறிந்துகொள்கின்றனர்.

- இங்ஙனம் மாணவ மாணவியரின் சொல்லகராதியை முன்னேற்றுவது மட்டுமல்லாது அவர்கள் கவிபுனைவதற்குப் புது விதமான வார்த்தைகள் அளிக்கும் மூலகாரணியாக ஒரு நாள் ஒரு சொல் திகழ்கிறது.



## 16 முத்தமிழ் மன்ற ஆசிரிய ஆலோசகர்களுடன் கலந்தாய்வு

| | |
|---|---|
| தேதி | : 09/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 10 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன் |
| சிறப்பு விருந்தினர் | : - |


- முத்தமிழ் மன்ற ஆசிரிய ஆலோசகர்களுடனான கலந்தாய்வு அக்டோபர் 9 (09.10.2020) அன்று கூகுல் மீட் (GOOGLE MEET) நிகழ்நிலைத் தளத்தில் நடத்தப்பட்டது.
- அதில் மன்ற செயல்பாடுகள் குறித்த கருத்துகளும் , மேலும் நிகழவிருக்கும் நிகழ்வுகள் பற்றிய கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.



# 17 முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு

| | |
|---|---|
| தேதி | : 10/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 3 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 30 |
| பொறுப்பாளர்கள் | : செ.செல்வப்பிரியா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுடனான கலந்தாய்வு அக்டோபர் 10 (10.10.2020) அன்று கூகுல் மீட் (GOOGLE MEET) நிகழ்நிலைத் தளத்தில் நடத்தப்பட்டது.
- அதில் மன்ற செயல்பாடுகள் குறித்த கருத்துகளும் , மேலும் நிகழவிருக்கும் நிகழ்வுகள் பற்றிய கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.



# 18 காற்றின் மொழி காணொலி வெளியீடு

| | |
|---|---|
| தேதி | : 18/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 15 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 210 |
| பொறுப்பாளர்கள் | : அ.ராபின் இன்ஃபன்ட் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்ற மாணவ மாணவியரின் திறமைகளை உலகறியவைக்க புதியதோர் முயற்சியாய் பாட்காஸ்ட் (PODCAST) சாளரமாகக் கொண்டு "காற்றின் மொழி "நிகழ்வின் முதல் காணொலி அக்டோபர் 18ஆம் நாள் (18.10.2020) முத்தமிழ் மன்ற வலையொளி மற்றும் படவரிப் பக்கத்தில் வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழியில் பதிவிடப்படும் பதிவுகள் அனைத்தும் புதன்தோறும் "*ஸ்பாட்டிபை (SPOTIFY )*"மற்றும் "*முத்தமிழ் மன்ற படவரி பக்கத்தில் (INSTAGRAM PAGE )*" வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.




- காற்றின் மொழி பாட்காஸ்டின் இலட்சினையும் அக்காணொலியில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- இதன்மூலம் திறமையுள்ள மாணவ மாணவிகள் தங்களின் திறமைகளை வெளிக்கொணர காற்றின் மொழியும் ஒரு சிறந்த தளமாகத் திகழ்கிறது.

# 19 **கதைப்போமா**

| | |
|---|---|
| தேதி | : 21/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு |
| காலம் | : 45 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 50 |
| பொறுப்பாளர்கள் | : நா.நந்தீஷ் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்ற புலனக் குழுவில் “கதைப்போமா” என்னும் நிகழ்வு அக்டோபர் 21 ஆம் நாள் (21.10.2020) தொடங்கப்பட்டது.
- முதலில் ஒருவர் ஒரு சொற்றொடரை அனுப்ப , பின் வருபவர் அதனைத் தொடர்ந்து , அதனைச் சார்ந்து மற்றொரு சொற்றொடர் அமைப்பர்.
- ஆக இறுதியில் அனைத்தையும் சேர்த்து சுவாரஸ்யமான கதையை அமைக்கும் வரை நிகழ்வு தொடர்ந்து நடைபெறும்.
- இந்நிகழ்வு மன்ற உறுப்பினர்களின் கற்பனைத் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.







- இந்நிகழ்வு இரண்டு , மூன்று மற்றும் நான்காம் ஆண்டு மன்ற உறுப்பினர்களிடையே நிகழ்த்தப்பட்டது .
- இறுதியாக கிடைக்கப் பெற்ற கதையில் பல்வேறு சுவாரஸ்யமான யூகிக்க முடியாத திருப்பங்கள் இடம்பெற்றிருந்தன.

# 20 காற்றின் மொழி ( இனிதே துவக்கம் )

| | |
|---|---|
| தேதி | : 21/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 30 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 770 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி ஒன்றான "இனிதே துவக்கம்" அக்டோபர் 21 (21.10.2020) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் முதல் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் சக்தி தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதி காற்றின் மொழி பாட்காஸ்டின் அறிமுகப் பகுதியாகக் கருதப் படுகிறது.



# 21 புத்தகம் 360° (பகுதி 1)

| | |
|---|---|
| தேதி | : 23/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி, கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் (மாலை 5-6) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 40 |
| பொறுப்பாளர்கள் | : ஆ.மௌனிதா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- "புத்தகம் 360" என்னும் நிகழ்நிலை நிகழ்வானது அக்டோபர் 23 (23.10.2020) அன்று தொடங்கப்பட்டது.
- நம் மன்ற உறுப்பினர்களான இரண்டு , மூன்று மற்றும் நான்காம் ஆண்டு மாணவ மாணவியர் தாங்கள் படித்த புத்தகத்தினைப் பற்றிய விமர்சனங்களை பகிரும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.
- நான்காம் ஆண்டு உறுப்பினரான தீபிகா *மோகினி தீவு* புத்தகத்தைப் பற்றியும், நான்காம் ஆண்டு உறுப்பினரான கிருஷ்ணமூர்த்தி *கள்ளிக்காட்டு இதிகாசம்* புத்தகம் பற்றியும் தொகுத்து வழங்கினர்.

- நான்காம் ஆண்டு உறுப்பினரான கௌசல்யா *கல்கியின் பொன்னியின் செல்வன்* புத்தகத்தை வாரந்தோறும் ஒவ்வொரு பகுதியாக பிரித்து சுவாரஸ்யமாக அனைவரையும் கவரும் வண்ணம் எடுத்தியம்பினார்.
- இவ்வாறாக மன்ற உறுப்பினர்களின் புத்தக வாசிப்பை மேம்படுத்தும் நோக்குடன் "புத்தகம் 360" நடைபெற்றது.






# 22 காற்றின் மொழி ( அன்றே கணித்தார்)

| | |
|---|---|
| தேதி | : 28/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 30 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 180 |
| பொறுப்பாளர்கள் | : சஷ்டிகா |
| சிறப்பு விருந்தினர் | : - |

முத்தமிழ் மன்றம்

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி இரண்டான “அன்றே கணித்தார்” அக்டோபர் 28 (28.10.2020) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் இரண்டாம் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் சஷ்டிகா தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதி யில் தொகுப்பாளர் சஷ்டிகா நம் முன்னோர்களின் அன்றாட வாழ்க்கை நடப்புகள் பற்றியும் அதன்பின் ஒளிந்திருக்கும் அறிவியல் மகத்துவம் பற்றியும் தெளிவாக பார்வையாளர்களுக்கு தொகுத்து வழங்கினார்.
- இதன்மூலம் தொகுப்பாளர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சிறந்த தளமாக காற்றின் மொழி திகழ்கிறது.

- பார்வையாளர்கள் எளிதில் கருத்துகளை உள்வாங்கிக் கொள்ளும் வகையில் தொகுப்பாளர்கள் தொகுத்து வழங்கி வருகின்றனர்.



முத்தமிழ் மன்றம்

# 23 புத்தகம் 360° (பகுதி 2)

| | |
|---|---|
| தேதி | : 30/10/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி, கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் (மாலை 5-6) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 30 |
| பொறுப்பாளர்கள் | : ஆ.மௌனிதா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- "புத்தகம் 360" என்னும் நிகழ்நிலை நிகழ்வின் பகுதி 2 அக்டோபர் 30 (30.10.2020) அன்று நடத்தப்பட்டது.
- நம் மன்ற உறுப்பினர்களான இரண்டு , மூன்று மற்றும் நான்காம் ஆண்டு மாணவ மாணவியர் தாங்கள் படித்த புத்தகத்தினைப் பற்றிய விமர்சனங்களை பகிரும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.
- மூன்றாம் ஆண்டு உறுப்பினரான வசந்த மாலிகா *சிவகாமியின் சபதம்* புத்தகத்தைப் பற்றித் தொகுத்து வழங்கினர்.

- நான்காம் ஆண்டு உறுப்பினரான கௌசல்யா *கல்கியின் பொன்னியின் செல்வன்* புத்தகதை வாரந்தோறும் ஒவ்வொரு பகுதியாக பிரித்து சுவாரஸ்யமாக அனைவரையும் கவரும் வண்ணம் எடுத்தியம்பி வந்தார்.
- இவ்வாறாக மன்ற உறுப்பினர்களின் புத்தக வாசிப்பை மேம்படுத்தும் நோக்குடன் ‘‘புத்தகம் 360 ’’ வாரந்தோறும் நடைபெற்றது.






# 24 மாணவர் மன்ற துவக்க விழா

| | |
|---|---|
| தேதி | : 04/11/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் (மாலை 6-7) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 100 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன் |
| சிறப்பு விருந்தினர் | : முனைவர் வே.செல்லதுரை |

- நம் கல்லூரியின் மாணவர் மன்ற துவக்க விழா நவம்பர் 4 (04.11.2020) அன்று கூகுல் மீட்டில் (GOOGLE MEET) நடைபெற்றது.
- நம் கல்லூரி முதல்வர் முனைவர் வே.செல்லதுரை அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றினார்.
- நிகழ்ச்சியில் தொகுப்பாளராக நம் மன்ற உறுப்பினரான ஆ.மௌனிதா செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 25 காற்றின் மொழி (புகுந்த வீடு)

| | |
|---|---|
| தேதி | : 05/11/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 30 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 234 |
| பொறுப்பாளர்கள் | : ப.ஜெய்சீலன் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி மூன்றான ‘‘புகுந்த வீடு ’’ நவம்பர் 5 (05.11.2020) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் மூன்றாம் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் ஜெய்சீலன் தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதி யில் தொகுப்பாளர் ஜெய்சீலன் நம் கல்லூரி வாழ்க்கையைப் பற்றியும் விடுதி வாழ்க்கையைப் பற்றியும் கேட்பவர் மனதில் ஏக்கம் கொள்ளும் வகையில் பார்வையாளர்களுக்கு தொகுத்து வழங்கினார்.
- இதன்மூலம் தொகுப்பாளர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சிறந்த தளமாக காற்றின் மொழி திகழ்கிறது.

- பார்வையாளர்கள் எளிதில்  கருத்துகளை  உள்வாங்கிக் கொள்ளும் வகையில் தொகுப்பாளர்கள்  தொகுத்து  வழங்கி வருகின்றனர்.



# 26 இளம்பறவை இதழ் 2020 வெளியீடு

| | |
|---|---|
| தேதி | : 06/11/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலைத்தளம். |
| காலம் | : 1 மணி நேரம் (மாலை 5-6) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 169 |
| பொறுப்பாளர்கள் | : கி.செ.கணநாதன் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- இளம்பறவை 2020 (அகவை 32) திருத்துதல்கள் முடிவடைந்த நிலையில் முத்தமிழ் மன்ற வலைத்தளத்திலும் புலனக்குழுவிலும் நவம்பர் 6 (06.11.2020) அன்று வெளியிடப்பட்டது.
- ஆங்காங்கே உள்ள திறமைகளை ஆவணப்படுத்த அச்சடித்த மேடையாய், ஆண்டிற்கொருமுறை எண்ண ஓட்டங்களின் எதிரொலியாய், பல வண்ணங்களில் பண்பட்ட தாய்தமிழினை பாரனைத்தும் பறைசாற்றுகிறது இளம்பறவை.
- திறமைகளுக்குரிய பாராட்டுகளை வழங்கிடும் ஓர் உன்னத மேடையாய், நம் மாணாக்கரின் படைப்புகளை எட்டுத்திக்கும் கொண்டுசேர்க்கும் ஓர் உன்னத இதழாக இளம்பறவை இருந்து வருகிறது.

- நம் மாணவர்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரும் ஒரு சிறந்த மேடையாக இளம்பறவை ஆண்டுதோறும் திகழ்ந்து வருகிறது என்பதில் ஐயமேதுமில்லை.






# 27 காற்றின் மொழி ( ஒன்றிலிருந்து ஆறு வரை )

| | |
|---|---|
| தேதி | : 12/11/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 30 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 190 |
| பொறுப்பாளர்கள் | : மு.கௌசல்யா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி நான்கான "ஒன்றிலிருந்து ஆறு வரை" நவம்பர் 5 (05.11.2020) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் நான்காம் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் கௌசல்யா தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதி யில் தொகுப்பாளர் கௌசல்யா ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை இவ்வுலகில் பரினாம வளர்ச்சி அடைந்து வந்த வரலாற்றைப் பற்றிப் பார்வையாளர்களுக்கு புரியும் வகையில் தொகுத்து வழங்கினார்.
- இதன்மூலம் தொகுப்பாளர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சிறந்த தளமாக காற்றின் மொழி திகழ்கிறது.




- பார்வையாளர்கள் எளிதில் கருத்துகளை உள்வாங்கிக் கொள்ளும் வகையில் தொகுப்பாளர்கள் தொகுத்து வழங்கி வருகின்றனர்.

# 28 காற்றின் மொழி ( இந்த நாள் இனிய நாள் )

| | |
|---|---|
| தேதி | : 14/11/2020 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 15 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 138 |
| பொறுப்பாளர்கள் | : வ.சே.கரண் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி ஐந்தான “இந்த நாள் இனிய நாள்” தீப ஒளித் திருநாள் நவம்பர் 14(05.11.2020) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் ஐந்தாம் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் கரண் தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதி யில் தொகுப்பாளர் கரண் தீப ஒளித் திருநாளைப் பற்றித் தொகுத்து வழங்கினார்.



# 29 இளம்பறவை இதழுக்கான படைப்புகள் சேகரிப்பு

| | |
|---|---|
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) & அகல்நிலை (OFFLINE) |
| இடம் | : புலனக் குழு |
| காலம் | : 1 மணி நேரம் (மாலை 5-6) |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 20 |
| பொறுப்பாளர்கள் | : வ.சே.கரண்<br>உ.தீபிகா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- இளம்பறவை இதழுக்கான படைப்புகள் சேகரிப்பதற்கான பணி தொடங்கிய நிலையில் முத்தமிழ் மன்ற வலைத்தளத்திலும் புலனக்குழுவிலும் அதற்கான சுவரொட்டி நவம்பர் 29 (29.11.2020) அன்று வெளியிடப்பட்டது.
- நம் மாணவர்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரும் ஒரு சிறந்த மேடையாக இளம்பறவை ஆண்டுதோறும் திகழ்ந்து வருகிறது.






# 30 முத்தமிழ் மன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு

| | |
|---|---|
| தேதி | : 05/01/2021 |
| செயல்வகை | : அகல்நிலை (OFFLINE) |
| இடம் | : கல்லூரி வளாகம் |
| காலம் | : 3 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 30 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன், செ.செல்வப்பிரியா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்ற இறுதியாண்டு உறுப்பினர்களுடனான கலந்தாய்வு ஜனவரி 5 (05.01.2021) அன்று கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.
- அதில் மன்ற செயல்பாடுகள் குறித்த கருத்துகளும் , மேலும் நிகழவிருக்கும் நிகழ்வுகள் பற்றிய கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.



**31**

# சொல்லாடல்

| | |
|---|---|
| தேதி | : 12/01/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 2 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 10 |
| பொறுப்பாளர்கள் | : சி.செ.பவித்ரா தேவி, ம.கிருஷ்ணமூர்த்தி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- பட்டிமன்ற பேச்சாளர்களுக்கான தேடல் “சொல்லாடல்” என்ற பெயரில் ஜனவரி 12 (12.01.2021) அன்று கூகுல் மீட் (GOOGLE MEET) நிகழ்நிலைத் தளத்தில் நடத்தப்பட்டது.
- மாணவ மாணவியரின் சொல்வன்மைகளை சோதித்து அதற்கேற்ப பட்டிமன்ற பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
- “*முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்*”,“*மெய்ப்பொருள் காண்பது அறிவு*” என்ற இரு தலைப்புகளின் கீழ் இத்தேர்வு நிகழ்த்தப்பட்டது.
- மாணவ மாணவிகளின் பேச்சுத் திறமைகளை வெளிக்கொணர்வதற்கான ஒரு சிறந்த மேடையாக முத்தமிழ் மன்றம் திகழ்ந்து வருகிறது.
- பங்குபெற்ற மாணவ மாணவிகளின் பேச்சாற்றல் , சொற்கள் பயன்பாடு, முதலியவற்றை கருத்தில் கொண்டு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.




- தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு பட்டிமன்றம் நடத்த திட்டமிடப்பட்டது.

# 32 காற்றின் மொழி (தைப்பொங்கல் )

| | |
|---|---|
| தேதி | : 14/01/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 15 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 223 |
| பொறுப்பாளர்கள் | : ஆ.மௌனிதா |
| சிறப்பு விருந்தினர் | : - |

- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் பகுதி ஆறான ‘‘தைப்பொங்கல்’’ பொங்கல் திருநாள் ஜனவரி 14(14.01.2021) அன்று வெளியிடப்பட்டது.
- காற்றின் மொழி பாட்காஸ்ட் நிகழ்வின் ஆறாம் பகுதியை மன்ற உறுப்பினரான தொகுப்பாளர் மௌனிதா தொகுத்து வழங்கினார்.
- இப்பகுதியில் தொகுப்பாளர் மௌனிதா தைத் திருநாள் குறித்து தொகுத்து வழங்கினார்.



# 33 கலையரங்கம் ( பறை இசை)

| | |
|---|---|
| தேதி | : 19/01/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற வலையொளி |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 140 |
| பொறுப்பாளர்கள் | : வே.சுஜித் குமார் |
| சிறப்பு விருந்தினர் | : - |

- கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் முத்தமிழ் மன்றத்தின் சார்பாக “கலையரங்கம்”(கலைகள் பற்றிய காணொலிகளின் தொகுப்பு)வெளியிடத் திட்டமிடப்பட்டது.
- பல்வேறு கலைகள் பற்றிய புரிதல் மற்றும் அதன் வரலாறு பற்றி அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் ,இந்த “கலையரங்கம்” தொகுப்பு அமையும் என்ற நோக்கத்தில் ,பறை இசை கலை குறித்த இந்த முதல் காணொலி ஜனவரி 19 (19.01.2021) அன்று வெளியிடப்பட்டது.
- இக்காணொலியைக் காண்பதன் மூலம் பறை இசை குறித்த தெளிவான தகவல்கள் பார்ப்போர் மனதில் பதியுமாறு அமைந்திருந்தது.
- பறை இசை குறித்த காணொலியை மன்ற உறுப்பினரும் வலைதள ஒருங்கிணைப்பாளருமான *வே.சுஜித் குமார்* தொகுத்து வழங்கினார்.

- இதேபோன்று இதர கலைகளான பொம்மலாட்டம் , சிலம்பாட்டம் முதலியவற்றிற்கும் காணொலி வெளியிடத் திட்டமிடப்பட்டது.






# 34 பச்சை கிளிகள் தோழோடு

| | |
|---|---|
| தேதி | : 23/01/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 35 |
| பொறுப்பாளர்கள் | : அ.அருள் பிரசாத், ப.காந்திமதி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- நம் மன்றத்தின் முதல் மற்றும் இரண்டாமாண்டு உறுப்பினர்களுக்காக இணைய வழிப் போட்டிகள் "***பச்சை கிளிகள் தோழோடு***" என்னும் பெயரில் நடத்தப்பட்டது.
- மூன்றாம் ஆண்டு மாணவ மாணவிகள் அடுத்த ஆண்டு மன்றத்தினை வழிநடத்த முன் அனுபவமாக போட்டிகளை ஒருங்கினைத்து நடத்தினர்.
- மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய, கலை சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டன.



# 35 சொந்த கதை சோகக் கதை

| | |
|---|---|
| தேதி | : 28/02/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு , முத்தமிழ் மன்ற படவரி |
| காலம் | : 15 நிமிடங்கள் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 20 |
| பொறுப்பாளர்கள் | : மா.ஸ்ரீனிவாசன், த.பவதாரிணி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- முத்தமிழ் மன்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு உறுப்பினர்களிடையே எழுத்துப் பயிற்சியை ஊக்குவிக்கவும் அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் கற்பனைத் திறன்களை வளர்க்கவும் "***சொந்தக் கதை சோகக் கதை***" என்னும் நிகழ்வு முத்தமிழ் மன்ற புலனக் குழுவில் பிப்ரவரி 28 (28.02.2021) அன்று தொடங்கப்பட்டது.



# 36 அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியின் நிரல்களம்’21 (HACKATHON)

| | |
|---|---|
| தேதி | : 06/03/2021 |
| செயல்வகை | : நிகழ்நிலை(ONLINE) |
| இடம் | : புலனக் குழு,கூகுல் மீட் (GOOGLE MEET) |
| காலம் | : 1 மணி நேரம் |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 4 பேர் ( 1 குழு) |
| பொறுப்பாளர்கள் | : த.பவதாரிணி, மு.அஜய் ,தி.லோகநாதன்,தி.ரூபேஷ்,பா.சேதுபாரதி |
| சிறப்பு விருந்தினர் | : - |

- அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி (GCT)யின் தமிழ் மற்றும் நுண்கலை மன்றம் மற்றும் உத்தமம் (உலகத் தமிழ் தொழில்நுட்ப மன்றம்) இணைந்து மார்ச் 5,6,7 ஆகிய தேதிகளில் **நிரல்களம்’21 (HACKATHON)** நடத்தியது.
- நம் கல்லூரியின் மூன்றாமாண்டு மாணவர்கள் அதில் பங்கேற்றனர்.
- சங்ககாலத் தமிழ் வாழ்வியல் மெய்நிகர் உண்மை (ANCIENT TAMIL LIFESTYLE USING VIRTUAL REALITY) என்பதைக் கருவாகக் கொண்டு அதில் கலந்து கொண்டனர்.
- சங்ககால தமிழ் மக்கள் மற்றும் நாகரிகங்கள் இவ்வாறு தான் இருந்திருக்கக் என்பதனைப் பல நூல்கள் மற்றும் கீழடி போன்ற தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களின் இடைப்பட்ட பொருட்கள் மூலம் ஒரு முன்

மாதிரியினை உருவாக்கி அதில் மக்கள் இவ்வாறுதான் வாழ்ந்தார்கள் என்பதனைப் பார்ப்போர் நிஜமென உணரும் வகையில் மெய்நிகர் உண்மை(VIRTUAL REALITY) வழியாக காண்பித்தனர்.

- இவ்வாறான நிகழ்வுகள் மூலம் மாணவர்களுக்குள் இருக்கும் பல்வேறு திறன்கள் வெளிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



முத்தமிழ் மன்றம்

**37**

# <u>உரியர் பிறர்க்கு</u>

| | |
|---|---|
| தேதி | : 20/03/2021 |
| செயல்வகை | : அகல்நிலை (OFFLINE) |
| இடம் | : காப்பகங்கள் |
| காலம் | : காலை 9 மணி முதல் மாலை 8 மணி வரை |
| பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | : 5 காப்பகங்கள் |
| பொறுப்பாளர்கள் | : நா.நந்தீஷ் |
| சிறப்பு விருந்தினர் | : - |



- கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் முத்தமிழ் மன்றத்தின் பெருமை மிக்க நிகழ்வான காப்பகவாழ் குழந்தைகளுகான "***உரியர் பிறர்க்கு***" மார்ச் 20 (20.03.2021) அன்று நடைபெற்றது.

- காப்பகவாழ் குழந்தைகளுக்காக தமிழ் சார்ந்த போட்டிகளும் கலைப் போட்டிகளும் நடத்தப்பட்டு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளும் வழங்கப்படும்.
- காப்பகவாழ் குழந்தைகளுக்காக ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்வான உரியர் பிறர்க்கு கொரோனா கட்டுப்பாடு காரனமாக கல்லூரி வளாகமின்றி காப்பகங்களுக்கே சென்று அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு திட்டமிடப்பட்டது.
- கீழ்வருமாறுள்ள காப்பகங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன
    - யுனிவர்சல் பீஸ் ஃபௌன்டேசன் (UPF)
    - குழந்தைகள் குடும்பம்( FFC)
    - ஆசிரிய பால பவன்
    - லிட்டில் ஹார்ட்ஸ்
- மாணவ மாணவிகள்,ஆசிரியர்கள், கல்லூரியின் மேனாள் மாணாக்கர்கள், தொழில் முனைவோர்கள் அனைவரிடமும் அவர்களால் இயன்ற உதவிகளைக் கொண்டு காப்பகங்களுக்குத் தேவையான பொருள்கள் தரப்பட்டது.
- மேலும் இந்நிகழ்வினைப் பற்றிய விரிவான குறிப்புகள் தனியொரு குறிப்பேடாக செய்யத் திட்டமிடப்பட்டது.















**கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014**

**முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை**

# நிகழ்வு அறிக்கை

# (2023-2024)

கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

நாள் : 21/09/2023

நேரம்: மாலை 5 மணி முதல் 7 மணி வரை

இடம்: ஐ டி வளாகம், கோவை தொழில்நுட்பக்கல்லூரி

பங்கேற்பாளர்கள்: 100

**மன்ற துவக்க விழா**

- மன்ற துவக்க விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.இசை மன்ற மாணவர்கள் மற்றும் அனைவரும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர்.



- வரவேற்புரைக்கு பின் நமது பாரம்பரிய நடனமான " பரதநாட்டியம்" அரங்கேற்றப்பட்டது.



- நமது கல்லூரி மாணவிகள் மூலம் தமிழர்களின் வீர விளையாட்டாக திகழும் "சிலம்பம்" நடைபெற்றது.




- பறை மூலம் ஒவ்வொரு நிகழ்வும் தொடங்கியது.



- தாரணி என்ற நமது குழு மாணவி " தெற்கு சூரியன்" என்ற தலைப்பில் பேசினார்

.



- தமிழ் பாரம்பரியம் சமூகம் சார்ந்து பாடப்பட்டது.



- ஐந்து பேர் கொண்ட நமது குழு உறுப்பினர்கள் வாயிலாக ஒயிலாட்டம் நடைபெற்றது.



- இறுதியாக நன்றி உரையுடன் இனிதே விழா நிறைவுபெற்றது.

- மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாரம்பரிய உடை அணிந்து கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

நாள் : 11/12/2023

நேரம்: மதியம் 12 .30 முதல் 1.30 மணி வரை

இடம்: எம் பி சி ஹெச்

பங்கேற்பாளர்கள்: 50

பாரதியார் பிறந்த நாளை ஒட்டி 6/12/2023 அன்று கல்லூரி மாணவர்களுக்கு பாரதியும் பாரதமும் சார்ந்த தலைப்புகளில் பேச்சு போட்டி நடைபெற்றது. இதில் இரண்டு மூன்று மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் பங்கு பெற்றனர். பதினைந்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது பேச்சுத் திறனை வெளிப்படுத்தினர். பேச்சுப் போட்டிக்கு நடுவர்களாக கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் தமிழ்த்துறை ஆசிரியர் திருமதி இராஜலட்சுமி அவர்களும் கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் முத்தமிழ் மன்ற ஆசிரிய ஆலோசகர் முனைவர் திருமதி ராஜலட்சுமி அவர்களும் இருந்தனர். இதில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுத்தொகையாக தலா ஐந்தாயிரம் மூன்றாயிரம் இரண்டாயிரம் வழங்கப்பட்டது.

இப்பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு விழா பாரதியாரின் பிறந்த நாளான 11/12/2023 அன்று எம் பி சி ஹெச் அறையில் நடந்தது. பரிசளிப்பு நிகழ்ச்சி தமிழ்த்தாய் வாழ்த்தி குத்துவிளக்கேற்றி இனிதே தொடங்கியது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கோவை தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் திருமதி ராஜேஸ்வரி அம்மாள் தலைமை தாங்கினார். அவர் மாணவர்களின் செயல்களை பாராட்டி மேன்மேலும் அவற்றை வளர்த்துக் கொள்ள அறிவுரை வழங்கி சிறப்புரையாற்றினார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பாரத செம்மொழிகளின் திருவிழா - பேச்சு போட்டியின் கீழ் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.போட்டியில் முதல் பரிசாக மாணவி சுஷ்மிதா, இரண்டாம் ஆண்டு, கணினி அறிவியல் துறை, இரண்டாம் பரிசாக ரசித்ரா, தகவல் தொழில்நுட்பவியல் துறை, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் பரிசாக மாணவர் வைத்தீஸ்வரன், இயந்திரவியல் துறை, முதலாமாண்டு ஆகியோர் பெற்றனர். அவர்களுக்கான பரிசு தொகையை சிறப்பு விருந்தினர் வழங்கினார். மேலும் பங்கு பெற்ற அனைவருக்கும் புத்தகமும் சான்றிதழும் வழங்கப்பட்டது.






கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி








செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100
பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023 - 11.12.2023)
கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை
முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை
Bharatiya Bhasha Utsav
(28.09.2023 - 11.12.2023)
"Languages are many; Emotion is one"
கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி
நாள் : 11.12.2023
இடம் : எம் பி சி ஹெச்


Veg & Non Veg Feast
கோவை தொழில்நுட்பக் கல்லூரி
முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை
அகவை 67
வழங்கும்
பரிசளிப்பு விழா
சிறப்பு விருந்தினர் : முனைவர் ராஜேஸ்வரி
இடம் : கோவை தொழில்நுட்பக் கல்லூரி
திங்கட்கிழமை
11 டிசம்பர்
: 12:30 P.M
: MBCH
cit_muthamilmandram

கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

**நாள்** : 11/01/2024

**நேரம்**: மதியம் 2.00 முதல் மாலை 6.30 வரை

**இடம்**: கபடி வளாகம்

பங்கேற்பாளர்கள்: 100

பொங்கல் பண்டிகை திருநாளை ஒட்டி 11/01/2024 அன்று கல்லூரி மாணவர்களுக்கு, பொங்கல் திருவிழா நடைபெற்றது. இவ்விழா இசை மன்றம், தற்காப்பு கலை மன்றம், நடனம் மற்றும் நாடகக் கலை மன்றம் ஆகிய மன்றகளுடன் இணைந்து நடைபெற்றது. மேலும் விருப்பம் கொண்ட அனைத்து ஆண்டு மாணவர்களும் பங்கேற்றனர்.

முதல் நிகழ்வாக பொங்கல் வைத்தல், கல்லூரி கோவில் முன்பு நிகழ்ந்தது. இதில் மன்ற உறுப்பினர்கள் அனைவரும், குழுவாக பிரிந்து மண்பானையில், பொங்கல் வைத்து மகிழ்ந்தனர். அனைவரின் பொங்கலும் இறைவன் முன்னிலையில் வைத்து, இறைப்பாடு செய்து, திருவிழாவைக் கொண்டாடினர்.

அடுத்த நிகழ்வாக, மன்றங்களின் நிகழ்ச்சிகள் தொடர்ந்தது. தற்காப்பு கலை மன்றம் சார்பாக கயிறு இழுத்தல் போட்டி நடைபெற்றது. விருப்பம் உள்ளோர், குழுவாக பிரிந்து போட்டியில் பங்கேற்றனர். பின், இசை மன்றம் சார்பாக இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இசை குழுவினர்கள், தமிழ் மண் மற்றும் வாசம் வீச பாடல்களைப் பாடினார்கள். அடுத்த நிகழ்வாக, நடனம் மற்றும் நாடகக் கலை மன்றம் சார்பாக, தனி நபர் நடனம் மற்றும் குழு நடனம் அரங்கேறியது. அனைத்து மாணவர்களும் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

இறுதியாக, தற்காப்பு கலை மன்றம் சார்பாக, சிலம்பாட்டம் நடைபெற்றது. சமநிலையில் தண்ணீர் வைத்த தராசினைக் கொண்ட நிகழ்வும் நடைபெற்றது. அனைவரும் சேர்ந்து ,பொங்கல் பண்டிகை திருநாளாக, அந்நாளை திருவிழா கோலம் கொண்டு கொண்டாடினர்.





















கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

**நாள்** : 11/01/2024

**நேரம்**: **காலை** 9:00 முதல் மதியம் 12.00 வரை

இடம்: ஆடிட்டோரியம்

பங்கேற்பாளர்கள்: 300

தமிழ் வளர்ச்சியை முன்னிட்டும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழை எப்படி பயன்படுத்தலாம் என்பதை விளக்கும் விதமாக 12/02/2024 அன்று கல்லூரி மாணவர்களுக்கு, மாபெரும் தமிழ் கனவு விழா நடைபெற்றது. இவ்விழா அணைத்து ஆண்டு மாணவர்களுக்கும் நடைபெறற்றது மேலும் விருப்பம் கொண்ட அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்றனர்

முதல் நிகழ்வாக கல்லூரி முதல்வர் மாண்புமிகு பேச்சாளர் **திரு.முத்து குமார் ராஜு** அவர்களை அழைத்து வந்து நினைவு பரிசு வழங்கினார். மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தனி உதவியாளர் இன் நிகழ்வில் கலந்து கொண்டார். மேலும் தமிழ் கனவு விழாவின் நிகழ்விற்கு புத்தகங்களும் கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, விழாவின் நோக்கத்தை விலகும் வகையில் மாணவர்களின் விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்தளிக்கும் வகையிலும், தமிழ் மொழியின் மேன்மைகளை எடுத்துரைக்கும் வகையிலும் காணொளி ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்விற்குப் பின் மாண்புமிகு பேச்சாளர் திரு.முத்து குமார் ராஜு அவர்கள் உரையாற்றினார்.அவரின் உரையால் மாணவர்களின் செவிகள் குளிர்ந்து அறிவுத்திரன் மேம்பட்டு தொழில்நுட்பதில் தமிழை எப்படி பயன்படுத்தலாம் என்பதன் விளக்கம் நன்றாக தெரிந்துகொண்டனர்.


இறுதியாக, மாணவர்களிடம் வினா விடை அமர்வு நடைபெற்றது அதில் மாணவர்கள் தங்களின் கேள்விகள் அனைத்தையும் மாண்புமிகு பேச்சாளர் அவர்களிடம் கேட்டு அறிந்துகொண்டனர். இனிதே மாபெரும் தமிழ் கனவு நிகழ்வு முடிவடைந்தது.















**நாள்** : 17/03/2024

**நேரம்**: **காலை** 9:00 முதல் மாலை 5:00 வரை

இடம்: ஆடிட்டோரியம்

பங்கேற்பாளர்கள்: 50

"உரியர் பிறர்க்கு" என்ற மாபெரும் விழா, 17/03/2024 அன்று நம் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நம் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், 4 ஆசிரமங்களில் இருந்து சிறுவர் சிறுமியர்களை அழைத்து வந்தது. இச்சிறுவர் சிறுமியர்களை அழைத்து வர கல்லூரி பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

முதலில், முத்தமிழ் மன்ற ஆலோசகர், பேராசிரியர் _________ அவர்கள் நிகழ்வைத் தொடங்கி, நிகழ்வின் முக்கியத்துவம் மற்றும் சமூக பொறுப்பின் இன்றியமையாமையை பற்றி உரையாற்றினார். அவரது உரையில், சிறுவர் சிறுமியர்களின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்கு குறித்து பேசப்பட்டது.

அதன் பின், நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் வரவேற்புப் நடனம் நிகழ்த்தப்பட்டது, பின்னர் தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டது. குழந்தைகளுக்கு வரவேற்பு உரை வழங்கப்பட்டது, இதனால் அவர்கள் இந்நிகழ்வின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அதனைத் தொடர்ந்து, குழந்தைகளின் உற்சாகத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் மற்றும் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. இவற்றில் ஓவியப்போட்டி, விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் குழந்தைகள் உற்சாகத்துடன் பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். முத்தமிழ் மன்ற உறுப்பினர்கள், குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டு விடுவிப்பாளர்கள், குழந்தைகளை

போட்டிகள் மற்றும் விளையாட்டுகள் நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

போட்டிகள் முடிந்த பிறகு, குழந்தைகளுக்கு கல்லூரி மையத்தில் ஆரோக்கியமான மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த உணவின் ஏற்பாட்டை கல்லூரியின் உணவக குழுவினர் சீரிய முறையில் செய்திருந்தனர்.


மதிய உணவிற்கு பின், போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இப்பரிசுகள் குழந்தைகளின் உற்சாகத்தை மேலும் உயர்த்தின.






இந்த நிகழ்வை முன்னிட்டு, ஆசிரமங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட நிதி மூலம், நம் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரமங்களுக்காக விளையாட்டு பொருட்கள், அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கியது.








பரிசுகள் வழங்கப்பட்ட பின், முத்தமிழ் மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் தொண்டு விடுவிப்பாளர்கள் குழந்தைகளை மீண்டும் அவர்களின் ஆசிரமங்களுக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குழந்தைகள் கல்லூரி பேருந்துகளில் அழைத்து செல்லப்பட்டனர்.

நிகழ்வு முடிவில் நன்றி உரை நிகழ்த்தப்பட்டது, இதில் விழாவின் வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் முத்தமிழ் மன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

இந்நிகழ்வு சிறப்பாக முடிவடைந்து "உரியர் பிறர்க்கு" விழா இனிதே நிறைவுற்றது.

கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை

**நாள்** : 17/03/2024

**நேரம்**: **காலை** 9:00 முதல் மாலை 5:00 வரை

இடம்: ஆடிட்டோரியம்

பங்கேற்பாளர்கள்: 100

முதலாம் ஆண்டு முடிவையொட்டி அணைத்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் கல்லூரியின் மாணவர் மன்றத்தின் சார்பில் நக்ஷத்திரா நிகழ்வு நடைபெற்றது

**"வண்ணத்தில் வண்ணம்"** போட்டியில் பங்கேற்பாளர்களுக்கு பல வண்ண நிறத்தின் பெயர்கள் திரையில் பட்டியலிட்டு அவர்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பங்கு பெற்று குறிப்பிட்ட நேரத்தில் வாசித்தனர்





**"கொஞ்சம் நடிங்க பாஸ்"** போட்டியின் மூலம் மாணவர்களின் பன்முக திறன் வெளிவந்தது.



**“செந்தமிழ் பழகு”** இந்நிகழ்ச்சியில் பல்வேறு ஆங்கில சொற்களுக்கு ஏற்ற செந்தமிழ் சொற்கள் கண்டுபிடிக்க மாணவர்களிடையே மிகுந்த ஆர்வமும் தமிழ் மீதான பற்றும் தெரியவந்தது







**"ஒரு வார்த்தை ஒரு லட்சம்"** போட்டியில் கலந்துகொண்டு மாணவர்கள் வார்த்தை புதிரோடு இணைந்து ஆர்வத்துடன் விளையாடினர்.







**"முத்தமிழரசன் முத்தமிழரசி "** இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது.முதல் கட்டத்தில் இலக்கண இலக்கியம் சார்ந்த வினாடி வினா நடத்தப்பட்டது. அதில் ஏறத்தாழ 50 மாணவர்கள் பங்குகொண்டார்கள்.அதில் அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் 6 மாணவர்களை தேர்வு செய்தோம்.அதில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இரண்டாம் கட்டமாக நேர்காணல் நடத்தப்பட்டது.அதிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு மாணவருக்கு "முத்தமிழரசன் முத்தமிழரசி" என பட்டம் அளித்தோம்.





கோவை தொழில்நுட்பக் கல்லூரி, கோவை – 641 014

முத்தமிழ் மன்றம் மற்றும் இளம்பறவை











அணைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு சிறப்பாக பங்கேற்ற ஒரு மாணவருக்கு “**விகடகவி**” என்னும் மன்றத்தின் பட்டம் வழங்கப்பட்டது